THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE3(B)-Fundamentals of Law

### September 2017

All Rights Reserved

## பிரிவு 01

**விடை 01**

1.1

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 1.4.2<br>தரப்படும் நிறுவனங்களின் பிரதான தொழிற்பாடுகளை இனங்காணல். |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 23,25 |
| **சரியான விடை: C** |

1.2

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 2.2.1<br>ஒப்பந்தக் கட்டுறுப்புக்களின் (நிபந்தனைகள், உத்தரவாதங்கள், விலக்களிப்புச் சரத்துக்கள்) கருத்து, விலக்களிப்புச் சரத்துக்களின் தாக்கம் மற்றும் 1997 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க நியாயமற்ற ஒப்பந்த கட்டுறுப்புகள் சட்டம் ஆகியவற்றை விபரித்தல், |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 46,54 |
| **சரியான விடை : D** |

1.3

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 2.5.2<br>நீதியற்ற சட்டவாக்க கோட்பாட்டினை விபரித்தல். |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 68 |
| **சரியான விடை : D** |

1.4

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 3.3.1<br>இடர் கடத்தப்பட்டு உரிமை மாற்றப்படும் காலத்தினை ஆராய்தல் (நிட்சயமற்ற பொருட்கள், உரிமை ஒதுக்கம், தவணை அடிப்படை வினியோகம், ஏலம்மூலமான விற்பனை, உரிமையாளர் அல்லாத நபரினால் விற்பனை). |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 90 |
| **சரியான விடை : B** |

1.5

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 3.2.1<br>பொருட்களின் விற்பனைக்கான ஒப்பந்தத்தில் பிரயோகிக்கப்படும் உட்கிடையான நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்களை விபரித்தல். |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 86 |
| **சரியான விடை : C** |

1.6

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 4.2.1<br>கீழ்வருவன தொடர்பில் பிரயோகிக்கப்படும் காசோலைச்சட்ட கோட்பாடுகள் மற்றும் அவற்றின் வர்த்தக முக்கியத்துவத்தினை விபரித்தல் - (புறக்குறிப்பிடல், குறுக்குக்கோடிடல், கொடுப்பனவு மறுத்தல் மற்றும் பங்கியாளர் பரிப்பு) |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 113 |
| **சரியான விடை : C** |

1.7

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 5.4.1<br>சம்பந்தப்பட்ட தரப்பினரின் செயற்பாட்டினால் மற்றும் சட்டப் பிரயோகத்தினால் முகவராண்மை முடிவுக்கு கொண்டுவரப்படும் சந்தர்ப்பங்களை குறிப்பிடுதல். |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 131 |
| **சரியான விடை : C** |

1.8

| |
|---|
| கற்கை வெளிப்பாடு :<br>5.2.1 முகவரொருவர் உண்மையான அதிகாரத்தினையும் (வெளிப்படை அதிகாரம் மற்றும் உட்கிடை அதிகாரம்) போலியான அதிகாரத்தினையும் (ostensible authority) பெற்றுக்கொள்ளும் புறநிலைகளை விபரித்தல்.<br>5.5.1 முகவரொருவர் உண்மையான அதிகாரத்துடன், போலியான அதிகாரத்துடன் மற்றும் அதிகாரமின்றி செயற்படும்போத அவரின் பரிப்பினை குறிப்பிடுக. |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 124,133 |
| **சரியான விடை : B** |

1.9

| |
|---|
| கற்கை வெளிப்பாடு :<br>7.1.1 உரிய விதிவிலக்குகளுடன் EPF மற்றும் ETF க்கு பங்களிப்போர் யாரென குறிப்பிடுக.<br>7.1.3 ஊழியர் ஒருவர் EPF மற்றும் ETF க்கான தமது பங்களிப்பை மீளப்பெறக்கூடிய சந்தர்ப்பங்களை நிரற்படுத்துக. |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 210 |
| **சரியான விடை : A** |

1.10

| |
|---|
| கற்கை வெளிப்பாடு : 8.2.1<br>கீழ்வரும் சட்டங்கள் பற்றி சுருக்கமாக குறிப்பிடுக: 2006 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க பணச்சலவைத் தடைச் சட்டம், 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனிய ஊடுசெயற் சட்டம், கணனிக் குற்றச் செயற் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்) |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 222,223 |
| **சரியான விடை : B** |

**(2 x 10 = மொத்தம் 20 புள்ளிகள்)**

# பிரிவு 2

**விடை 02**

2.1

கற்கை வெளிப்பாடு: 1.2.1
இலங்கையில் பிரயோகிக்கப்படும் பிரதான பிரதான சட்ட முறைமைகளை இனங்காண்க.

கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 9

இலங்கைச் சட்டமுறைமை கொண்டுள்ள சில பிரதான சட்டங்கள் கீழ்வருமாறு:

- ரோமன் -டச்சுச் சட்டம் அல்லது பொதுச் சட்டம் (Roman-Dutch Law or Common Law).
- ஆங்கிலச் சட்டம் (English Law)
- கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம் போன்ற தனிப்பட்ட சட்டங்கள்
- பௌத்த சட்டம் மற்றும் இந்துச் சட்டம்
- சட்டவாக்கம்/ பாராளுமன்றில் இயற்றப்படும் சட்டம் (Statute Law)
- நீதித்துறைத் தீர்மானங்கள் /வழக்குகள் வழிவந்த சட்டங்கள்
- மரபுரீதியான சட்டம் (Customary Law)

2.2

கற்கை வெளிப்பாடு 3.1.1
பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தத்திற்கும் வேலை மற்றும் மூலப்பொருட்களுக்கான ஒப்பந்தத் திற்கும் இடையிலான வேறுபாட்டினையும் பொருட்கள் விற்பனை வகைப்படுத்தலையும் ஆராய்தல.

கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 81

“விற்பனைக்கான ஒப்பந்தம்” மற்றும் “விற்பனைக்கான உடன்படிக்கை” இரண்டிற்கும் இடையிலான முக்கியமான வேறுபாடு:

விற்பனைக்கான ஒப்பந்தத்தில் பொருள்மீதான உடைமை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்போதே விற்பனையாளரிடமிருந்து கொள்வனவாளருக்கு மாற்றப்படும்.

ஆனால் விற்பனைக்கான உடன்படிக்கையில் பொருள்மீதான உடைமை உடன்படிக்கையினை ஏற்படுத்தும்போது மாற்றப்படுவதில்லை. அது எதிர்காலத்தில் சில நிபந்தனைகள் நிறைவு செய்யப் படும்போது மாத்திரமே மாற்றப்படும்.

2.3

கற்கை வெளிப்பாடு: 3.6.1
CIF ஒப்பந்தம் மற்றும் FOB ஒப்பந்தம் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை இனம்காணல்.

கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 247

கிரய, காப்புறுதி மற்றும் கேள்வி (CIF) ஒப்பந்தமொன்றில் வாங்குனரின் கடமைகள் கீழ்வருமாறு:

- ஆவணங்கள் வினியோகிக்கப்படும்போது கேள்வியினை கழித்த விலையினை செலுத்துதல். [பொருட்களை பரீட்சித்த பின்னர் கொடுப்பனவை தாமதிக்க முடியாது.]
- சுமைச்சீட்டின்படி (Bill of Lading) அடைவிடத் துறைமுகத்தில் பொருட்களை இறக்குதல் தொடர்புபட்ட கிரயத்தை செலுத்ததல். .
- இறக்குமதித் தீர்வை மற்றும் பண்டகசாலைக் கட்டணங்களை செலுத்துதல்.

NOT FOR SALE

2.4

கற்கை வெளிப்பாடு: 7.3.2
வேலை் மணித்தியாலம், வாராந்த மற்றும் வருடாந்த விடுமுறை மற்றும் லீவுகளை குறிப்பிடுதல்.

கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 203

1954 ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின கீழ் பெண் ஊழியர்களின் வேலைநேரம் தொடர்பில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் கீழ்வருமாறு:

- நாளொன்றிற்கு 9 மணித்தியாலத்திற்கு அதிகமாக வேலைவாங்கக் கூடாது. (மேலதிக வேலைநேரம் உட்பட)
- பிற்பகல் 8.00 மணியின் பின்னர் வேலைவாங்கக் கூடாது..
- மேற்படி கட்டுப்பாடுகளுக்கான விதிவிலக்குகள் ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் விமான சேவை போன்ற துறைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு பிரயோகிக்கப்படும்.

2.5

கற்கை வெளிப்பாடு: 8.2.1
கீழ்வரும் சட்டங்கள் பற்றி சுருக்கமாக குறிப்பிடுக: 2006 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க பணச்சலவைத் தடைச் சட்டம், 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலத்திரனிய ஊடுசெயற் சட்டம், கணனிக் குற்றச் செயற் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்)

கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 228

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தால் இனங்காணப்பட்ட புலமைச் சொத்துக்கள் கீழ்வருமாறு:

- பதிப்புரிமை (Copyright)
- கைத்தொழில் வடிவமைப்புக்கள் (Industrial designs)
- ஆக்க உரிமை (Patents)
- குறிகளும் வியாபாரக் குறிகளும் (Marks and trademarks)
- வியாபாரப் பெயர்கள் (Trade names)
- ஒன்றித்த சுற்றுக்களின் தளவடிவமைப்பு (Layout designs of integrated circuits)
- புவிசார் காட்டிகள் (Geographical indications)

NOT FOR SALE

## பிரிவு 3

**விடை 03**

(a)

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 2.1.1<br>வலிதான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகளை விபரித்தல். அதாவது, கொடைமுளைவு, ஏற்பு, சட்டரீதித் தொடர்புமுறையினை ஏற்படுத்தும் நோக்கம், தகைமையும் வடிவமும் (LaesioEnormis தத்துவம் உட்பட). ஒப்பந்த உடன்படிக்கை, கொடைமுனைவும் ஏற்பும், ஒப்பந்தத்திற்கான தகைமை, ஒப்பந்தங்களின் வடிவங்கள் மற்றும் சம்மதத்தின் உண்மைநிலை ஆகியவற்றின் பொருள்வரையறை, |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 43 |

<u>வழக்கின் பெயர்:</u>

இந்தத் தருநிலையின் தரவுகள் தீர்மானிக்கப்பட்ட வழக்கான Felthouse vs Bindley (1862) 11 CB (NS) 869 இன் தரவுகளை ஒத்தவையாகும்.

<u>வழக்கின் தரவுகள் :</u>

Felthouse (F) தமது மருமகனான Brindley (B) க்கு எழுதிய கடிதத்தில் அவரது குதிரையை வாங்க கொடைமுனைவு செய்வதாகவும், இந்தக் கொடைமுனைவு தொடர்பில் எந்தவொரு பதிலும் கிடைக்கப் பெறாத பட்சத்தில் அந்தக் குதிரை $30 க்கு தன்னுடையதாக கொள்வதாகவும் எழுதியிருந்தார்.

B அதற்கு பதிலிறுக்கவில்லை. ஆனால் அந்தக் குதிரை ஏற்கனவே F க்கு விற்கப்பட்டுள்ளதாகவும், எனவே ஏலத்தில் விற்கவேண்டாமெனவும் B தமது ஏலவிற்பனையாளருக்கு கூறியிருந்தார். ஆனால் அந்தக் குதிரை தவறுதலாக ஏலத்தில் வேறொருவரக்கு விற்கப்பட்டது.

B யினால் F க்கு அறிவித்தல் ஏதும் விடுக்கப்படாமையினால் F இனால் மேற்கொள்ளப்பட்ட கொடை முனைவு B யினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என தீர்மானிக்கப்பட்டது. எனவே F மற்றும் B க்கு இடையில் வலிதான ஒப்பந்தம் ஏற்படவில்லை.

கொடைமுனைவு மற்றும் ஏற்புத் தத்துவங்களின்படி, ஏற்பானது கொடைமுனைவை ஏற்படுத்தியோனுக்கு எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ அல்லது நடத்தையின் மூலமாகவோ தெரிவிக்கப்பட வேண்டும்.

மௌனம் அல்லது கொடைமுனைவு விடுக்கப்பட்டவரின் செயற்பாடின்மை கொடைமுனைவின் வலிதான ஏற்பாக கொள்ளப்பட மாட்டாது. அதாவது, கொடைமுனைவு ஒன்றினை மனத்தளவில் ஏற்றல் அல்லது தெரிவிக்கப்படாது ஏற்றல் கொடைமுனைவின் ஏற்பதாகாது

எனவே, தரப்பட்ட தருநிலையில் ரொம் தமது கார் பிராங்கிற்கு விற்கப்பட்டதாக ஏலவிற்பனை யாளருக்கு சொல்லிய போதிலும் (தெரிவித்த போதிலும) ரொம் அந்த ஏற்பினை கொடைமுனைவை விடுத்த பிராங்கிற்கு தெரிவித்திருக்கவில்லை.

எனவே முறையான ஏற்பு இடம்பெறவில்லை.

NOT FOR SALE

(b)

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 2.1.1<br>வலிதான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகளை விபரித்தல். அதாவது, கொடைமுளைவு, ஏற்பு, சட்டரீதித் தொடர்புமுறையினை ஏற்படுத்தும் நோக்கம், தகைமையும் வடிவமும் (LaesioEnormis தத்துவம் உட்பட). ஒப்பந்த உடன்படிக்கை, கொடைமுனைவும் ஏற்பும், ஒப்பந்தத்திற்கான தகைமை, ஒப்பந்தங்களின் வடிவங்கள் மற்றும் சம்மதத்தின் உண்மைநிலை ஆகியவற்றின் பொருள்வரையறை |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 36/37 |

<u>வழக்கின் பெயர் :</u>

இதே உண்மைகள் ***Carlill v Carbolic Smoke Ball Co. [1893] 1 Q.B. 256*** வழக்கிலும் ஆராயப்பட்டன.

<u>வழக்குத் தொடர்புபட்ட தரவுகள் :</u>

Carlill கம்பனியானது அதன் சுவாசித்தல் பந்தினை (smoke ball) அதில் தெரிவித்துள்ளவாறு பாவித்த பின்னரும் இன்புளுவென்ஸா நோய்க்கு ஆளாகும் எவருக்கும் £100 பரிசினை வழங்க கொடைமுனைவு செய்தது. கார்லில் எனும் பெண் தெரிவித்திருந்தவாறு சுவாசித்தற் பந்தினை பாவித்த பின்னரும் இன்புளுவென்ஸா நோய்க்கு ஆளானார். அவர் £100 பரிசினை கோரியபோதிலும் கம்பனி அதனை செலுத்த மறுத்தது.

**<u>தீர்ப்பு</u>**
இந்தக் கொடைமுனைவானது உலகில் உள்ள யாவருக்கும் (world at large) விடுக்கப்பட்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டது. குறித்தவாறு கார்லில் சுவாவித்தற் பந்தினை பாவித்ததன்மூலம் கொடைமுனைவுக்கு அமைய செயற்பட்டமை அந்த கொடைமுனைவை ஏற்றுக்கொண்டதனை குறிக்கின்றது. எனவே கம்பனி குறித்த £100 தொகையினை செலுத்தவேண்டிய கடப்பாட்டினை கொண்டுள்ளது.

தரப்பட்ட தருநிலையில் SPL விடுத்துள்ள பத்திரிகை விளம்பரம் உலகிலுள்ள யாவருக்கும் விடுக்கப்பட்ட கொடைமுனைவாக கொள்ளப்படும். அத்தகைய கொடைமுனைவுகள் எங்கேனும் உள்ள எந்த ஒருவருக்கும் விடுக்கப்பட்டதாக கொள்ளப்படும்.

எனவே இந்தக் கொடைமுனைவுகள் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

கொடைமுனைவுக்கு அமைய செயற்படுவதன்மூலம் அந்தக் கொடைமுனைவு ஏற்றுக்கொள்ளப்படலாம். கொடைமுனைவினை ஏற்றுக்கொண்டமை பற்றி கொடைமுனைவினை விடுத்தவருக்கு குறிப்பிட்டு தெரிவிக்க வேண்டியதில்லை.

எனவே தரப்பட்ட தருநிலையில் கம்பனியால் சம்பத்துக்கு வலிதான கொடைமுனைவு விடுக்கப்பட்டு, அதற்கு அமைய செயற்பட்டதன் மூலம் அந்தக் கொடைமுனைவினை ஏற்றுக்கொண்ட காரணத்தால் கம்பனி (SPL) பரிசுத் தொகையான ரூபா 25,000 இனை சம்பத்திற்கு செலுத்தவேண்டும்.

NOT FOR SALE

**விடை 04**

(a)

| |
|---|
| கற்கை வெளிப்பாடு: 5.7.6<br>பங்காளருக்கும் மூன்றாம் தரப்பினருக்கும் இடையிலான தொடர்பினை குறிப்பிடுதல். |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 149 |

பொதுவாக ஓய்வுபெறும் பங்காளர் தமது ஓய்வுக்குப் பின்னர் பங்குடமை பெறும் கடன்களுக்கு பொறுப்புடையவர் அல்ல.

மேலும் கடன்கொடுனர் நிறுவனத்துடன் முன்னர் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளாதும், ஓய்வுபெறும் பங்காளர் முன்னைய பங்காளரென தெரியாமலும் இருப்பின், அல்லது ஓய்வுபெற்ற பங்காளர் பற்றி அறிவித்தல் விடுக்கப்பட்டு இருந்தால், அத்தகைய கடனுக்கு ஓய்வுபெறும் பங்காளர் பரிப்புடையவர் ஆகமாட்டார்.

தரப்பட்ட தருநிலையில் தருணி இதற்கு முன்னர் பங்குடமையுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்திராததுடன் இம்ரான் ஒரு பங்காளர் எனத் தெரிந்திருக்கவில்லை. எனவே, இம்ரனின் ஓய்வு தொடர்பில் பகிரங்க அறிவித்தல் இல்லாதபோதிலும், அவர் தருனியுடனான ஊடுசெயலுக்கு பரிப்பினை <u>கொண்டிருக்கமாட்டார்.</u>

கடன்கொடுத்தவர் இதற்கு முன்னர் பங்குடமையுடன் கொடுக்கல் வாங்கல் செய்யாதிருந்தும், ஓய்வு பெறும் பங்காளர் முன்னைய பங்காளரென தெரியாமலும் இருக்கும்போது அல்லது ஓய்வு பெறும் பங்காளர் ஓய்வுபெறுதல் தொடர்பில் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பின். ஓய்வு பெறும் பங்காளர் (இந்த நிலையில் முன்னைய பங்காளர் என்ற ரீதியில்) நிறுவனத்தின் அத்தகைய கடனுக்கு பொறுப்பாளராக கருதப்பட மாட்டார்.

தரப்பட்டுள்ள தருநிலையில், தருணி பங்குடமையுடன் முன்னர் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடாதும் இம்ரன் ஒரு பங்காளரென தெரிந்திராதும் உள்ளதனால், ஓய்வுபற்றிய அறிவித்தல் தரப்படாவிடினும், இம்ரான் ஓய்வுபெற்ற பங்காளர் என்ற ரீதியில் இந்த ஊடுசெயலுக்காக தருணிக்கு பரிப்புடையவர் <u>அல்ல.</u>

தரப்பட்டுள்ள தருநிலையில் பொருட்களுகக்கான கட்டளை பெறப்பட்டபோது இம்ரான் ஏற்கனவே ஓய்வு பெற்றுள்ளமையால் பங்குடமையும் இந்த ஊடுசெயலுக்கு பரிப்புடையதல்ல.

எனவே இம்ரன் தனிப்பட்ட ரீதியில் இந்த ஊடுசெயலுக்காக தருணிக்கு பரிப்புடையவர்.

NOT FOR SALE

(b)

| | |
|---|---|
| கற்கை வெளிப்பாடு: 4.3.1<br>மாற்றுண்டியல் தொடர்பில் ஈற்றில் உடையவர் (holder in due course) மற்றும் முன்னிலைப்படுத்தலை (presentment) பொருள்வரையறை செய்து அவற்றின் வர்த்தக முக்கியத்துவத்தை விபரிக்குக. | |
| கற்கைப் புத்தகத் தொடர்பு – பக்கம் 106 | |

**மாற்றுண்டியலின் முன்னிலைப்படுத்தலுக்கு பிரயோகிக்கக்கூடிய விதிகள்:**

- முன்னிலைப்படுத்தல், உண்டியல் காலம்கடக்க முன்னர் வியாபார நாளொன்றில் நியாயமான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- உண்டியல் பங்குதாரர் அல்லாத ஒன்றிற்கு மேற்பட்டோருக்கு வரையப்பட்டிருப்பின், அதில் ஒருவர் மற்றைய எல்லார் சார்பிலும் ஏற்றுக்கொள்ள அங்கீகாரம் பெற்றிருந்தாலன்றி, அது எல்லோருக்கும் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

- வரையப்படுனர் இறந்திருப்பின், அவரின் தனிப்பட்ட பிரதிநிதிக்கு முன்னிலைப்படுத்தலாம்.

- வரையப்படுனர் வங்குரோத்து நிலையடைந்திருப்பின் முன்னிலைப்படுத்தல் அவருக்கோ அல்லது அவரின் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கோ மேற்கொள்ளப்படலாம்;

- உடன்படிக்கையால் அல்லது பயன்பாட்டில் அதிகாரமளித்திருப்பின், தபால் அலுவலகம் ஊடாக முன்னிலைப்படுத்தல் போதுமானது.

- உண்டியல் முன்னிலைப்படுத்தவேண்டிய தினம் வங்கி விடுமுறை தினமாகில், அடுத்த வேலை நாளில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

NOT FOR SALE

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளு அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

---

NOT FOR SALE